இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 02-07-2023



# நீக்குவதற்கு தைரியம் இருக்கிறதா?

“இந்த நாட்டில் இரண்டு விதமான சட்டங்கள் இருக்க முடியாது” என்று கொந்தளித்து இருக்கிறார் பிரதமர் நரேந்திரமோடி. இதுவே இவருக்கு இப்போதுதான் தெரியுமா? இவர் அரசியலுக்கு வந்து எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன? எத்தனை ஆண்டுகள் குஜராத் மாநில முதலமைச்சராக இருந்தார்? பிரதமர் பதவியில் ஒன்பது ஆண்டுகள் இருந்துவிட்டாரே? அவருக்கு இப்போதுதான் தெரிகிறதா, இந்த நாட்டில் இரண்டு சட்டங்கள் இருப்பது?!

இந்த நாட்டில் இரண்டு விதமான சட்டங்கள் அல்ல; விதவிதமான சட்டங்கள் இருக்கின்றன. ஏனென்றால், இது பல்வேறு இனம் - மொழி - சமய - மக்கள் வாழும் நாடு. பல்வேறுபட்ட பழக்க வழக்கங்களும், பண்பாட்டு விழுமியங்களும் கொண்ட நாடு இது. இங்கு சில சிறப்புக் கவனங்கள் சிலவற்றுக்குச் செய்து ஆகத்தான் வேண்டும். அந்த வகையில் சில சட்டங்கள் இருக்கின்றன. இது சிறப்பாக ஆட்சி நடத்துவதற்கு அவருக்குத் தடையாக இருக்கிறதா?

**நாட்டின் வளர்ச்சிக்கும் - பொருளாதார வளர்ச்சிக்கும் இங்கே இருக்கும் திருமணச் சட்டம் தடையாக இருக்கிறதா? ‘ஆடத் தெரியாதவர், தெரு கோணலாக இருக்கிறது’ என்றாராம். அது போல இருக்கிறது பிரதமரின் கூற்று.**

**‘சட்டம் அனைவருக்கும் பொது’ என்றால், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையே திருத்தியாக வேண்டும். ஏனென்றால், பல்வேறு மாநிலங் களுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் சிறப்புரிமையை இந்திய அரசிய லமைப்புச் சட்டம் வழங்கி இருக்கிறது. ஏதோ காஷ்மீருக்கு மட்டும் கொடுத்ததைப் போல, அதனை மட்டும் திரும்பப் பெற்றது பா.ஜ.க. அரசு. காஷ்மீரைப் போலவே சிறப்புரிமை பல்வேறு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கு இருக்கிறது. ‘காஷ்மீருக்கு தனிச் சட்டமா’ என்று கேட்டு, நீக்கியவர்களுக்கு, மற்ற மாநிலச் சிறப்புச் சட்டங்கள் மீது கை வைக்கத் தைரியம் இல்லை.**

இப்போது, ‘இரண்டு சட்டமா இந்த நாட்டில்?’ என்று கேட்கும் பிரதமருக்கும் கிடையாது!

இந்திய அரசியலமைப்பின் 371 ஆவது பிரிவின் கீழ் பல்வேறு இந்திய யூனியன் மாநிலங்களுக்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அரசியலமைப்பின் xxi மற்றும் xxii பாகங்களில் காணக்கூடிய இந்திய அரசியலமைப்பின் பிரிவு 371 ஆவது பிரிவானது, நாட்டுக்குள் சில மாநிலங்களுக்கு பல தற்காலிகம், இடைநிலை மற்றும் விதிவிலக்கான விதிகளை வழங்குகிறது. இச்சட்டமானது குஜராத், மகாராஷ்டிரா, நாகாலாந்து, மிசோரம், அசாம், ஆந்திரப்பிரதேசம், சிக்கிம், மணிப்பூர், அருணாசலப்பிரதேசம், கோவா, கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கு சிறப்பு ஏற்பாடுகளை வழங்குகிறது. இது அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 371 A முதல் 371 J வரையிலான பிரிவுகளாக அமைந்துள்ளது.

இதற்கு என்ன காரணம் சொல்லப்படுகிறது என்றால்... ‘இந்த மாநிலங்களின் வளர்ச்சியடையாத பகுதிகளில் குறிப்பிட்ட தேவைகளை நிறைவேற்றுவது, அவர்களின் பொருளாதார மற்றும் பண்பாட்டு நலன்களைப் பாதுகாப்பது, உள்ளூர் பிரச்சினைகளைத் தீர்ப்பது, அவர்களின் வழக்கமான சட்டங்களைப் பாதுகாப்பது’ என்றே சொல்லப்படு கிறது. அதாவது அந்தந்த மாநிலங்களுக்காக சிறப்பாக உருவாக்கப்பட்ட சட்டப்பிரிவுகள் இவை.

★ **371வது பிரிவில் குஜராத் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் விதர்பா, மராத்வாடா, கட்ச் உள்ளிட்ட மராத்திய மொழி பேசும் பகுதிகளில் சமச்சீரற்ற வளர்ச்சியை உறுதி செய்வதற்கான சிறப்பு ஏற்பாடுகளைச் செய்துகொள்ள அனுமதி தரப்பட்டுள்ளது.**

★ **371 ஏ - நாகாலாந்து தொடர்பான சிறப்பு விதிகள் செய்து தரப்பட்டுள்ளது. நாகர்களின் மதம் அல்லது சமூக நடைமுறைகள், பாரம்பர்யங்கள், மரபுகள் ஆகியவற்றை வைத்து சிவில் மற்றும் குற்றவியல் நீதி நிர்வாகங்களை வடிவமைத்துக் கொள்ளலாம்.**

★ **371 பி - அசாம் மாநிலத்துக்கு சிறப்புரிமை தரப்பட்டுள்ளது. அது பழங்குடியின பிரதிநிதித்துவத்தை உறுதி செய்கிறது.**

★ **371 சி - மணிப்பூருக்கான ஏற்பாடுகள் இப்பிரிவில் உள்ளது.**

★ **371 டி - ஆந்திரா, தெலுங்கானா குறித்த பிரிவுகள் இவை. உள்ளூர் மக்களின் கல்வி, வேலை உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இது உருவாக்கித் தரப்பட்டது.**

★ **371 எஃப் - சிக்கிம் மாநிலத்துக்கான ஏற்பாடுகள்.**

★ **371 ஜி - மிசோரம் மாநிலத்துக்கான ஏற்பாடுகள் ஆகும். மிசோரம் மக்களின் மதம் மற்றும் சமூக நடைமுறைகள் தொடர்பாக மிசோரம் மாநில சட்டமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றும் வரை நாடாளுமன்றம் நிறைவேற்றும் ஒரு சட்டம் அந்த மாநிலத்துக்குப் பொருந்தாது என்று இந்தப் பிரிவு உரிமை வழங்குகிறது. சிவில் மற்றும் குற்றவியல் நிர்வாகம் ஆனது மிசோ மரபுச் சட்டத்தின் முடிவுகளை உள்ளடக்கியே இருக்கிறது.**

★ **371 எச் - அருணாசலப் பிரதேசத்துக்கான சிறப்பு ஏற்பாடுகள் அடங்கிய பிரிவு இது.**

★ **371 ஐ - கோவாவுக்கான ஏற்பாடு.**

★ **371 ஜே - கர்நாடகாவுக்கான ஏற்பாடு. பின்தங்கிய பகுதிகளை வளர்க்க உரிமை வழங்குகிறது.**

- இவை எல்லாம் மாநிலங்களுக்கான தனியாகச் செய்யப்பட்ட சிறப்புச் சட்டங்கள் ஆகும். இதில் கை வைக்கத் தைரியம் உண்டா? ‘இரண்டு சட்டங்கள் இருப்பதைப் பார்க்க எனக்குப் பிடிக்கவில்லை’ என்று சொல்லும் பிரதமருக்கு இதெல்லாம் தெரியாதா?

காஷ்மீர் சிறப்பு தகுதிச் சட்டமான 370 நீக்கப்பட்ட போது, இது போல் மற்ற மாநிலங்களுக்கு உள்ள சிறப்பு தகுதிச் சட்டங்களையும் நீக்கி விடுவார்களோ என்ற அச்சம் தெரிவிக்கப்பட்டது. அப்போது நாகாலாந்து ஆளுநராக இருந்தவர், இப்போது இங்கு ஆளுநராக இருக்கும் ஆர்.என். ரவி. ‘நாகாலாந்து மக்கள் அச்சம் கொள்ள வேண்டாம். உங்களது சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்படாது’ என்று அப்போது உறுதி அளித்தார்.

நாகாலாந்தில், மணிப்பூரில் உள்ள சட்டங்களை நீக்குவதற்குத் தைரியம் இருக்கிறதா?



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.6.2023) தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இன்று பணிஓய்வு பெறுவதையொட்டி அவருக்கு சால்வை அணிவித்து, பணிப் பாராட்டு கடிதத்தை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.6.2023) தலைமைச் செயலகத்தில், காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ.சைலேந்திர பாபு, இன்று பணிஓய்வு பெறுவதையொட்டி அவருக்கு சால்வை அணிவித்து, பணிப் பாராட்டு கடிதத்தை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (30.6.2023) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உலக உணவு பாதுகாப்பு தினத்தையொட்டி 7.6.2023 அன்று புது தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தால் நடத்தப்பட்ட 2022-2023ஆம் ஆண்டிற்கான ”Eat Right Challenge போட்டியில் சிறந்த செயல்பாட்டிற்கான விருதிற்கு கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, பெரம்பலூர், சென்னை, காஞ்சிபுரம், சேலம், திருவள்ளூர், திருப்பூர், சிவகங்கை, நாமக்கல், திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு, அதற்காக வழங்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் 2022-2023ஆம் ஆண்டிற்கான மாநில உணவு பாதுகாப்பு குறியீட்டிற்கான செயல்பாட்டில் இந்திய அளவில் தமிழ்நாடு மூன்றாம் மாநிலமாக தேர்வு செய்யப்பட்டு, அதற்காக வழங்கப்பட்ட விருதினையும் காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, உணவு பாதுகாப்புத் துறை ஆணையர் ஆர்.லால்வேனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கறைபடாத தங்கள் பல்லாண்டு பணிக்காலத்தை நிறைவு செய்து

# ஓய்வு பெற்றுள்ள இறையன்பு - சைலேந்திரபாபுக்கு பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜுலை 2-

தலைமைச் செயலாளராக இருந்து இறையன்பு ஐ.ஏ.எஸ். அவர்களும், டி.ஜி.பி.யாக இருந்து சைலேந்திர பாபு ஐ.பி.எஸ். அவர்களும் நேற்று ஓய்வு பெற்றுள்ளது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் கறைபடாத தங்கள் பல்லாண்டு பணிக்காலத்தை நிறைவு செய்து இன்று ஓய்வு பெற்றுள்ள இறையன்பு ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், சைலேந்திர பாபு ஐ.பி.எஸ். அவர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுகள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**கறைபடாத தங்கள் பல்லாண்டு பணிக்காலத்தை நிறைவுசெய்து இன்று ஓய்வுபெற்றுள்ள இறையன்பு ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும் சைலேந்திர பாபு ஐ.பி. எஸ் அவர்களுக்கும் நமது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவிப்போம். சிறந்த அதிகாரிகளான இவ்விருவரும் மாறாத அர்ப்பணிப்புணர்வுடன் தமிழ்நாட்டுக் காகப் பணியாற்றியுள்ளனர். அவர்களது அணுகுமுறையும் சலியா முயற்சிகளும் பல நல் மாற்றங்களைக் கொணர்ந்ததோ டன்றி, நிர்வாகத்திலும் மிக ஆழமான தாக்கத்தைச் செலுத்தி, இளம் அதிகாரி களுக்கு ஊக்கமாக விளங்குகின்றன.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### இந்திய உணவுப் பாதுகாப்பு - தர நிர்ணய ஆணையத்தால் நடத்தப்பட்ட போட்டியில்

# தமிழ்நாட்டின் 13 மாவட்டங்களுக்கு - சிறந்த செயல்பாட்டிற்கான பாராட்டுச் சான்றிதழ்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் காண்பித்து - அமைச்சர் மா.சுப்பிரமணியன் வாழ்த்து!

சென்னை, ஜுலை 2-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (30.6.2023) தலைமைச் செயலகத் தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிர மணியன், உலக உணவு பாதுகாப்பு தினத்தையொட்டி 7.6.2023 அன்று புது தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி யில், இந்திய உணவு பாதுகாப்பு மற் றும் தரநிர்ணய ஆணையத்தால் நடத் தப்பட்ட 2022-2023ஆம் ஆண்டிற் கான “Eat Right Challenge” போட்டியில் சிறந்த செயல்பாட்டிற்கான விருதிற்கு கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, பெரம்பலூர், சென்னை, காஞ்சிபுரம், சேலம், திருவள்ளூர், திருப்பூர், சிவ கங்கை, நாமக்கல், திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு, அதற்காக வழங்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் 2022-2023ஆம் ஆண்டிற்கான மாநில உணவு பாதுகாப்பு குறியீட்டிற் கான செயல்பாட்டில் இந்திய அளவில் தமிழ்நாடு மூன்றாம் மாநிலமாகத் தேர்வு செய்யப்பட்டு, அதற்காக வழங் கப்பட்ட விருதினையும் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

உலக உணவுப் பாதுகாப்பு தினத் தையொட்டி 7.6.2023 அன்று புது டெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், உணவு வணிகங்களுக்கான உரிமம் / பதிவுச் சான்று வழங்குதல் மற்றும் உணவு மாதிரிகள் எடுத்து கண்கா ணித்தல், பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான உணவு வழங்கு வது குறித்து தர மதிப்பீடு செய்தல் மற் றும் சான்று வழங்குதல், தரமான, பாதுகாப்பான, செறிவூட்டப்பட்ட, ஊட் டச்சத்துக்கள் நிறைந்த உணவு பழக் கத்தை ஏற்படுத்துதல், உணவு உட் கொள்ளும் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற ஆக்கப்பூர்வமான செயல்பா டுகள் தொடர்பாக இந்திய உணவு பாது காப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத் தால் நடத்தப்பட்ட 2022-2023ஆம் ஆண்டிற்கான Eat Right Challenge போட்டியில் இந்திய அளவில் 260 மாவட்டங்கள் கலந்து கொண்டதில், வெற்றி பெற்றது என தேர்வு செய்யப் பட்ட 31 மாவட்டங்களில் தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, பெரம்பலூர், சென்னை, காஞ் சிபுரம், சேலம், திருவள்ளூர், திருப்பூர், சிவகங்கை, நாமக்கல், திருச்சி ராப்பள்ளி, வேலூர் ஆகிய 13 மாவட் டங்கள் சிறந்த செயல்பாட்டிற்கான விரு துகளை பெற்றுள்ளது. இப்போட்டியில், கோயம்புத்தூர் மாவட்டம் இந்திய அள வில் முதலிடம் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்திய உணவு பாது காப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம் உணவு பாதுகாப்பு துறையில் மனித வளம் மற்றும் நிறுவனங்களைப் பற் றிய தரவுகள், தர நிர்ணய விதிமுறை களைப் பின்பற்றுதல், உணவு பொருட் களைப் பரிசோதிப்பதற்கான கட்டமைப்பு மற்றும் கண்காணிப்பு, பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு, நுகர்வோருக்கு அதிகாரமளித்தல் ஆகிய ஐந்து குறியீடுகளின் அடிப்படை யில் தர மதிப்பீடு செய்து, 2022-2023 ஆம் ஆண்டிற்கான மாநில உணவு பாதுகாப்பு குறியீட்டிற்கான செயல்பாட் டில் இந்திய அளவில் தமிழ்நாடு மூன் றாம் மாநிலமாக தேர்வு செய்யப்பட்டு, அதற்கான விருதும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், தலைமைச் செயலா ளர் முனைவர் வெ. இறையன்பு, மருத் துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி, உணவு பாதுகாப்புத் துறை ஆணையர் ஆர். லால்வேனா, உணவு பாதுகாப்புத் துறை இயக்குநர் (ம) கூடுதல் ஆணையர் மரு. தேவ பார்த்தசாரதி, துணை இயக்குநர் டாக் டர் பிரதீப் கே. கிருஷ்ணகுமார், மாவட்ட நியமன அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 'வாட்ஸ் அப்'பில் வந்த செய்தி!

